## காஞ்சிபுரம் மாவட்டம்

## முதல் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2022

## 11 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 10 X 1 = 10 | | |
|---|---|---|
| 1 | ஆ | காரியதரிசிகளின் கணக்கியல் |
| 2 | ஆ | பணியாளர் |
| 3 | இ | வணிகத் தனித்தன்மை கருத்து |
| 4 | ஆ | நிறுவன தொடர்ச்சி கருத்து |
| 5 | ஈ | ₹. 40,000 |
| 6 | ஆ | கொடுபடவேண்டிய சம்பள கணக்கு |
| 7 | ஆ | பற்று இருப்பு |
| 8 | இ | முதல் கணக்கு |
| 9 | அ | அறிக்கை |
| 10 | இ | அனாமத்து கணக்கு |

### பகுதி – II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $5 \times 2 = 10$

11. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய (4) நபர்கள் யாவர்?

- உரிமையாளர்கள், பணியாளர்கள், நிர்வாகம் (அகப் பயனீட்டாளர்கள்)
- முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள்,கடனீந்தோர், வரிவிதிப்பு அதிகாரிகள், ஆராய்ச்சியாளற்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம் (புறப் பயனீட்டாளர்கள்)

12. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.

- ஜே.ஆர். பேட்லிபாய் அவர்களின் கூற்றுப்படி, "கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது, வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்".

( அல்லது )

- ஆர்.என். கார்ட்டர் அவர்களின் கூற்றுப்படி, "கணக்கேடுகள் பராமரிப்பு என்பது , பணம் அல்லது பணத்தின் மதிப்பிலுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளையும் கணக்கேடுகளில் சரியாக பதிவு செய்யும் கலை மற்றும் அறிவியல் ஆகும்."

13. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?

- கணக்கியல் கருத்துகள் என்பது, கணக்கியல் அடிப்படை அனுமானங்கள் ஆகும்.
- மேலும் கணக்கியல் கருத்துகள் என்பது, பரந்த ஒருமித்த கருத்துகளின் விளைவாகும்.



14. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?

- நிதிசார்ந்த நடவடிக்கைகளின் உண்மையான சான்றுகளை வெளிப்படுத்தும் ஆவணங்கள், ஆதார ஆவணங்கள் ஆகும்.
- நடவடிக்கை நிகழ்ந்த நாள், அதன் தன்மை, அதில் தொடர்புள்ள நபர்கள் மற்றும் தொகை ஆகியவற்றை உள்ளடக்கியதே ஆதார ஆவணங்கள் ஆகும்.

15. எடுத்தெழுதுதல் என்றால் என்ன?

- குறிப்பேட்டில் பதிவாகி உள்ள நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு இனங்களை பேரேட்டில் உள்ள கணக்குகளுக்கு மாற்றம் செய்வது எடுத்தெழுதுதல் எனப்படும்.

16. இருப்பாய்வு என்றால் என்ன?

- இருப்பாய்வு என்பது, ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கை ஆகும்.

17. கணக்கியலை வரையறு.

- அமெரிக்க பொதுக்கணக்காளர் சான்று நிறுவனத்தின் கூற்றுபடி, "கணக்கியல் என்பது குறைந்தபட்சம் ஒரு பகுதியாவது நிதியியல் தன்மைகொண்ட மற்றும் பணத்தால் மதிப்பிடக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை, முறையாக பதியும், வகைப்படுத்தும் சுருங்கக்கூறும் மற்றும் அதன் விளைவுகளை தெரிவிக்கும் ஒரு கலையாகும்".

( அல்லது )

- அமெரிக்ககணக்கியல் கழகத்தின் கூற்றின்படி, "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவிட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன்மூலம், தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்கதீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது".

### பகுதி - III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $5 \times 3 = 15$

18. கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக. ( ஏதேனும் 3 )

1) முறையானபதிவேடுகள்

- அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில், முறையாகவும், பொதுவான தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டும் தொகுக்கப் படுகின்றன.

2) நிதிநிலைஅறிக்கைகள் தயாரித்தல்

- வருமான அறிக்கை அல்லது இறுதிக் கணக்குகளை, உரிய காலங்களில் தயாரிப்பதன் மூலம் ,வணிகத்தின் இயக்க முடிவுகளையும், நிதி நிலையையும் அறிய முடியும்.
- இது உரிமையாளர்களுக்கு இலாபத்தை வழங்கவும், வணிகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு நிதியை அளிக்கவும் உதவுகிறது.

3) வளர்ச்சியை மதிப்பிடல்

- வணிகத்தின் நீர்மைத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் ஆகியவற்றின் முழுமையான நிலையினை நிர்வாகத்திற்கு கணக்கியல் அளிக்கிறது.



Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

4) முடிவெடுக்க உதவுதல்

- நிர்வாகம் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான, உரிய தகவல்களை கணக்கியல் அளிக்கிறது.
- அந்தத் தகவல்களின் அடிப்படையில் எதிர்காலக் கொள்கைகளையும் திட்டங்களையும் நிர்வாகம் உருவாக்குகிறது.

5) பயனீட்டாளர்களுக்கு தகவல் தருதல்

- உரிமையாளர்கள், நிர்வாகம், கடனீந்தோர், பணியாளர்கள், நிதி நிறுவனங்கள், வரிவிதிப்பு அதிகாரிகள் மற்றும் அரசாங்கம் போன்ற பல்வேறு பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் தகவல்களைத் தருகிறது.

6) சட்டச் சான்றாக இருத்தல்

- பொதுவாக நீதிமன்ற வழக்குகளிலும் இதர ஆணையங்களிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண கணக்கேட்டுப்பதிவுகள் சான்றாக ஏற்கப்படுகின்றன.

7) வரி கணக்கிடுதல்

- வருமானவரி மற்றும் இதரவரிகள் கணக்கிடுதல் மற்றும் செலுத்தலில் கணக்கேடுகள் அடிப்படை ஆதாரமாக இருக்கின்றன.

19. நிலைத்தன்மை மரபு குறித்து சிறு குறிப்பு வரைக.

- கணக்கியல் கொள்கையும், நடைமுறைகளும் தொடர்ச்சியாக ஒரு கணக்காண்டிலிருந்து மற்றொரு கணக்காண்டிற்கும் பின்பற்றப்படும் என்பதை இம்மரபு தெரிவிக்கிறது.
- ஒரே விதமான கணக்கியல் கொள்கைகள் பின்பற்றப்பட்டால்தான் வெவ்வேறு ஆண்டுகளின் முடிவுகளை ஒப்பீடு செய்ய முடியும்.
- உதாரணமாக, ஒரு நிறுவனம், நிலைச்சொத்து வாங்கியதிலிருந்தே நேர்க்கோட்டு தேய்மான முறையைப் பின்பற்றினால், தொடர்ச்சியாக அதையே பின்பற்ற வேண்டும். இருப்பினும், இதனை மாற்றம் செய்யவே முடியாது எனப் பொருள் கொள்ள இயலாது.

20. இரட்டைப்பதிவு கணக்கு முறையின் விதிகள் யாவை?

| | | |
|---|---|---|
| ஆள்சார் கணக்கு | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| சொத்து கணக்கு | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வரை வரவு செய்க |
| பெயரளவு கணக்கு | அனைத்துச் செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |

21. பேரேடு என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் யாவை?( ஏதேனும் 2 )

- பேரேடு என்பது ஆள்சார், சொத்துகள், பொறுப்புகள், செலவுகள் மற்றும் வருமானம் ஆகிய கணக்குகளில் இடம் பெற்றுள்ள மற்றும் ஒரு குறிப்பிட்டகாலத்திற்குரிய தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்று திரட்டி அதன் இறுதி விளைவைக் காட்டக் கூடிய ஒரு தொகுப்பு அறிக்கையாகும்





பேரேட்டின் பயன்பாடுகள்

(i) ஒரு குறிப்பிட்டகணக்கை பற்றிய தகவல்களை உடனடியாக பெறமுடிகிறது.

- விற்பனை, கொள்முதல், இயந்திரம் போன்ற ஒரு குறிப்பிட்ட கணக்கு சம்பந்தமான அனைத்து தகவல்களையும் பார்த்த உடனேயே தெரிந்து கொள்வதற்கு பேரேடு உதவுகிறது.

(ii) வணிகநடவடிக்கைகளைக்கட்டுப்படுத்துதல்

- பேரேட்டுக் கணக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து, கணக்குகளின் இருப்புகளை முழுவதுமாக பகுப்பாய்வு செய்யமுடியும்.
- அதன்மூலம் வணிக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

(iii) இருப்பாய்வு தயாரிக்க முடிகிறது

- பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க முடியும்.
- அதன் வாயிலாக, குறிப்பேடு மற்றும் பேரேட்டில் உள்ள கணக்கியல் பதிவுகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை அறிய முடிகிறது.

(iv) நிதிநிலைஅறிக்கைகளைத் தயாரிக்க உதவுகிறது

- பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகளைக் கொண்டு, நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்க முடியும்.
- அதன் மூலம், வணிகத்தின் நிகர இலாபம் அல்லது நட்டத்தையும் மற்றும் வணிகத்தின் நிதிநிலைமையையும் அறிந்து கொள்ள உதவுகிறது

22. இருப்பாய்வு தயாரிப்பதின் நோக்கங்கள் யாவை?

1. கணக்கீட்டின் சரித்தன்மையை பரிசோதனை செய்ய உதவுகிறது:
   - இருப்பாய்வு என்பது கணக்கேடுகள் பராமரிப்பு பணியில், கணக்கீட்டின் சரித்தன்மையை சரிபார்க்க உதவும் ஒரு வழிமுறை ஆகும்.
2. இறுதி கணக்குகளைத் தயாரிக்க அடிப்படையாக உள்ளது
   - இருப்பாய்விலிருந்து எடுக்கப்பட்ட பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகளை அடிப்படையாகக் கொண்டு, நிதிநிலை அறிக்கைகளான, வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்குகளையும் மற்றும் இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க முடியும்.
3. பிழைகளைக் கண்டுபிடிக்க உதவுகிறது
   - இருப்பாய்வு எப்போதாவது சமன்படாவிட்டால், அது கணக்கேடுகளில் பிழைகள் நேர்ந்திருக்கும் என்பதனை உணர்த்தும். ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கணக்கியல் செயல்முறை நிலைகளில் பிழைகள் ஏற்பட்டிருக்கலாம்.
   - எனவே, அப்பிழைகளை கண்டறிந்து ,அவை இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் முன்பு சரி செய்யப்பட வேண்டும்.
4. பேரேட்டுக் கணக்குகள் குறித்த தகவல்களை சுருக்கமாக தருகிறது
   - பேரேட்டுக் கணக்குகளின் தொகுப்பை இருப்பாய்வு காட்டுகிறது.
   - ஒரு குறிப்பிட்ட கணக்கின் முழுவிவரங்களையும் அறிய வேண்டுமானால் பேரேட்டுக் கணக்குகளைத்தான் பார்க்கவேண்டும்.



Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

23.

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| அ) | முதல் | ஆள்சார் கணக்கு |
| ஆ | கட்டடம் | சொத்து கணக்கு |
| இ | ரொக்கம் | சொத்து கணக்கு |
| ஈ | உள் ஏற்றிச்செல் செலவு | பெயரளவு கணக்கு |
| உ | கொள்முதல் | பெயரளவு கணக்கு |
| ஊ | சந்துரு | ஆள்சார் கணக்கு |

24. **கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக**

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ₹.1,00,000 | = | ₹.80,000 | + | ₹. 20,000 |
| (ஆ) | ₹.2,00,000 | = | ₹.1,60,000 | + | ₹. 40,000 |
| (இ) | ₹. 2,40,000 | = | ₹.1,60,000 | + | ₹. 80,000 |

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

25. அ) **கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.**

1) நிதி நிலைக் கணக்கியல்
- இது நிதியியல் நடவடிக்கைகளையும், நிகழ்வுகளையும் பதிவு செய்யக்கூடியது.
- ஏற்கனவே நடந்து முடிந்த நடவடிக்கைகளை மற்றும் நிகழ்வுகளை கணக்கேடுகளில் பதிவு செய்து பராமரிப்பதே நிதிநிலை கணக்கியலாகும்.

2) அடக்கவிலைக் கணக்கியல்
- பொருட்கள் அல்லது சேவைகளின் அடக்க விலையைக் கணக்கிடுவதற்கு செலவு விவரங்களை சேகரித்து, பதிவு செய்து, வகைப்படுத்தி, செலவினங்களை ஒதுக்கீடு செய்வது அடக்க விலை கணக்கியல் ஆகும்.

3) மேலாண்மைக் கணக்கியல்
- கணக்கியல் தகவல்களை நிர்வாகத்திற்கு தருவதன் மூலம் முடிவு எடுப்பதற்கும், நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கும் துணை செய்வதே மேலாண்மைக் கணக்கியல் ஆகும்.

4) சமூகப் பொறுப்பு கணக்கியல்
- இது வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவதாகும்.

5) மனிதவளக் கணக்கியல்
- இது ஒரு நிறுவனம், அதன் மனித வளத்தில் செய்த முதலீடுகளை இனம் காணுதல், அளவிடுதல், மற்றும் அறிவித்தல் ஆகியவற்றைச் சார்ந்ததாகும்



( அல்லது )

ஆ) **குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.**

| அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|
| பதிவு செய்தல் | நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும் | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது துணைஏடுகள் பராமரித்து வந்தால், ஒரு குறிப்பிட்டகாலத்தின் இறுதியில் அதாவது வாரத்தின் கடைசி நாள் அல்லது இரு வாரங்களுக்கு ஒருமுறை இதில்எடுத்தெழுதப்படும் |
| பதிவு செய்யும் நிலை | பதிவு செய்வது முதல் நிலையாகும் | குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும. |
| பதிவு செய்யும் வரிசை | நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின் படி பதிவு செய்யப்படுகிறது | கணக்குகளின் வரிசைப்படி ,பதிவுகள் செய்யப்படுகின்றன. |
| வழிமுறை | ஏடுகளில் பதிவு செய்வதை, குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம். | பேரேட்டில் பதிவு செய்வதை, எடுத்தெழுதுதல் என்கிறோம். |
| இருப்பாய்வு தயாரிக்க உதவுதல் | குறிப்பேட்டில் பதியப்பட்டுள்ள தொகைகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க இயலாது | பேரேட்டுக் கணக்குகளின் மூலம் கிடைக்கப் பெற்ற இருப்புகளே இருப்பாய்வு தயாரிக்க அடிப்படையாகிறது. |
| பதிவிற்கான ஆதாரம் | ஆதாரஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பேட்டுப்பதிவுகள் செய்யப்படுகின்றன. | குறிப்பேட்டுப் பதிவுகளைக் கொண்டு பேரேடு தயாரிக்கப்படுகிறது. |
| நிகர நிலை | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறிய முடியாது. | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறியலாம். |

26. அ) **விடுபட்ட பகுதிகளை நிரப்புக**

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| அ) | 30,000 | = | 20,000 | + | 10,000 |
| ஆ | 60,000 | = | 25,000 | + | 35,000 |
| இ | 55,000 | = | 25,000 | + | 30,000 |
| ஈ | 90,000 | = | 10,000 | + | 80,000 |
| உ | 25,000 | = | 10,000 | + | 15,000 |
| ஊ | 40,000 | = | 10,000 | + | 30,000 |



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

( அல்லது )

ஆ) **இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | வங்கி கடன் | | | 2,00,000 |
| 2 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | | 1,00,000 |
| 3 | சரக்கிருப்பு | | 70,000 | |
| 4 | முதல் | | | 2,50,000 |
| 5 | கொள்முதல் | | 1,80,000 | |
| 6 | விற்பனை | | | 3,00,000 |
| 7 | கடனாளிகள் | | 4,00,000 | |
| 8 | வங்கி | | 2,00,000 | |
| | மொத்தம் | | 8,50,000 | 8,50,000 |

27. அ)

**ஜெயசீலி ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஜன 1 | ரொக்க க/கு ப<br>ஜெயசீலி முதல் க/கு<br>( ஜெயசீலி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 80,000 | 80,000 |
| 2 | வங்கி க / கு ப<br>ரொக்க க / கு<br>( வங்கியில் ரொக்கம் செலுத்தியது) | | 40,000 | 40,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்க கொள்முதல் ) | | 5,000 | 5,000 |
| 4 | கொள்முதல் க/கு ப<br>ஹரி க/கு<br>( கடனுக்கு கொள்முதல் செய்தது ) | | 10,000 | 10,000 |
| 5 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( ரொக்கத்திற்கு விற்பனை செய்தது | | 11,000 | 11,000 |

( அல்லது )



ஆ)

**மனோகரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 மார் 1 | ரொக்க க/கு ப<br>மனோகர் முதல் க/கு<br>( மனோகர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 60,000 | 60,000 |
| 2 | அறைகலன் க / கு ப<br>ரொக்க க / கு<br>( ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ) | | 10,000 | 10,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது) | | 25,000 | 25,000 |
| 6 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( ரொக்கத்திற்கு விற்பனை செய்தது ) | | 28,000 | 28,000 |
| 18 | வாடகை க/கு ப<br>ரொக்க க/கு<br>( வாடகை செலுத்தியது ) | | 500 | 500 |



Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com